விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 235 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 25 சனிக்கிழமை (10.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## அமைச்சுப் பதவிகளை துறந்த ஹரின், மனுஷ





(கொழும்பு)
ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.
தொழிலாளர் மற்றும் வெளி 15

## கொடியேற்றத்துடன் அலங்காரக் கந்தனின் திருவிழா ஆரம்பம்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நேற்றைய கொடியேற்றத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பக்திபூர்வமாகக் கலந்து கொண்டனர். (ம-7)

## எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் தேர்தல் விதிகளை மீறினால் சிறையில் அடைக்கப்படுவர்

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்



(கொழும்பு)
**எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் தேர்தல் விதிகளை மீறினால் சிறையில் அடைக்கப்படுவார்கள் எனத் தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க எச்சரிக்கை செய்துள்ளார்.**

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் தேர்தல் விதிமுறைகள் மற்றும் தற்போதுள்ள அளவுகோல்களின் 15

## துப்பாக்கியுடன் கிளிநொச்சி இளைஞன் கைது

(அம்பாறை)
அம்பாறை, பொத்துவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் கிளிநொச்சி 15

## 35 இந்திய மீனவர்கள் கைது

(கொழும்பு)
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 35 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைதானவர்கள் 15

## துவிச்சக்கரவண்டியில் பேரனை ஏற்றிப் பயணித்தவர்

### கூலர் வாகனம் மோதியதில் மரணம் மன்னார் வீதியில் சம்பவம்



(மன்னார்)
துவிச்சக்கரவண்டியில் பேரனை ஏற்றிக் கொண்டு வீடு நோக்கிப் பயணித்தவர் கூலர் வாகனம் மோதியதில் உயிரிழந்துள்ளார்.
மன்னார் - தலைமன்னார் 15

## கனடா வர்த்தக சம்மேளனத்துடன் யாழ்.வணிகர் கழகம் ஒப்பந்தம்

(யாழ்ப்பாணம்)
இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனமும் யாழ்ப்பாண வணிகர் கழகமும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளனர்.
பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 15



## கிளிநொச்சி - ஆனையிறவில் மோட்டார் சைக்கிள் விபத்து

### இளைஞன் ஸ்தலத்தில் உயிரிழப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
குறித்த விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.
இதில் விசுவமடுவைச் சேர்ந்த காந்தருபன் கலையரசன் (வயது-21) என்ற இளைஞனே உயிரி 15

## திருவெண்காட்டில் இன்று கொடியேற்றம்

(மண்டைதீவு)
புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய மகோற்சவம் இன்று (10) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
தொடர்ந்து பத்துத் தினங்கள் நடை 15

## மக்கள் பசி தீர்க்கவே சுயேட்சையாக போட்டி

### ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)
மக்களின் பசி தீர்க்கவே ஜனாதிபதித் தேர்தலில் கட்சி வேறுபாடின்றி, சுயேட்சை வேட்பாளராக களமிறங்கியுள்ளதாக ஜனாதிபதி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 157 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 157 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு இது வரை 102 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங் களுக்கு இதுவர்ரையில் 55 முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## மணமகள் தேவை

மாதம் 60,000/=, அரச D.O ஊழியர். B.Com, M.com மணமகனுக்கு (ரோகிணி.2ல் செவ்வாய்). 18 வயது - 30 வயதுக்குட்பட்ட O/L, A/L படித்த பெண் பிள்ளை இந்து கௌரவ குடும்பத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. சீதனம், நன்கொடை விரும்பியவாறு கொடுக்கக்கூடியவர்கள். உள்நாட்டில் எதிர் பார்க்கப்படுகின்றது. (1664)

**077 879 2697**

## 2024ம் ஆண்டிற்கான மகோற்சவ கலந்துரையாடல் கூட்டம்

மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம் தொடர்பாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் அறங்காவல் சபையினால் 10.08.2024ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட கலந்துரையாடல் கூட்டம் 17.08.2024ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கண்ணன் இல்லத்தில் நடைபெறும் என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தயவுடன் தெரிவித்துக் கொள்வதோடு, அன்றைய தினம் வருகை தந்து தங்கள் கருத்துக்களை, ஆலோசனைகளை வழங்கி மகோற்சவம் திறம்பட நடைபெற ஒத்துழைப்புக்கள் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெறுநர்
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

(C-955)

# புலிகளை ஒழித்தது போல் ஊழலை முற்றாக ஒழிப்பேன்

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்தது போல, தான் ஆட்சிக்கு வந்தால் நாட்டிலிருந்து இலஞ்சம், மற்றும் ஊழலையும் முற்றாக ஒழிப்பேன் என பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்கியுள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவி மற்றும் கட்சியின் களனி அமைப்பாளர் பதவிகளில் இருந்து வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில், கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய சரத்பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நான் சுயாதீன வேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ளேன். இந்நாட்டின் கட்சி அரசியல் என்பது ஊழல், மோசடிகளால் நிரம்பியுள்ளது என்பதை நான் பல தடவைகள் கூறியுள்ளேன்.

கட்சி அரசியல் என்பது ஜனநாயக ரீதியாக இருக்க வேண்டும். ஆனால், எமது நாட்டில் மோசடியாளர்கள் தான் கட்சிகளை வழிநடத்தி செல்கிறார்கள். இந்தக் கட்சிகளில் உள்ள பெரும்பாலானோரும் மோசடியாளர்களாகத்தான் இருக்கிறார்கள். ஏனைய உறுப்பினர்களுக்கு நாட்டை வழிநடத்தும் அளவுக்கு போதிய அறிவும் தெளிவும் திட்டங்களும் கிடையாது. நான் ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் இன்று (நேற்று) விலகியுள்ளேன். எனினும், எனக்கு வாக்களித்து பாராளுமன்றுக்கு அனுப்பிய களனி மக்களுக்காக தொடர்ந்தும் சேவை செய்தத் தயாராகவே உள்ளேன்.

நாட்டை வழிநடத்தக் கூடிய சரியான தலைவரை மக்கள் இம்முறை தெரிவு செய்ய வேண்டும்.

இராஜதந்திர ரீதியாக தலைமைத்துவம் வகிக்கக் கூடிய ஒருவரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிக்காக நான் பெரும் பங்காற்றியிருந்தேன். எனினும் இந்தக் கட்சியின் தலைவரின் செயற்பாடுகள் தொடர்பாக என்னால் திருப்தியடைய முடியாது.

எல்.ரி.ரி.ஈ. அமைப்பை முற்றாக அழிப்பேன் என கூறிய போது யாரும்நம்பவில்லை. இறுதியில் செய்து காண்பித்தேன்.

அதேபோல, நாட்டின் ஊழல் மோசடிகளையும் நான் ஆட்சிக்கு வந்தவுடன் இல்லாதொழிப்பேன். ஒழுக்கமான ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஸ்தாபிப்பேன் என்றும் மக்களிடம் இவ்வேளையில் உறுதியளிக்கிறேன் இவ்வாறு பீல்ட் மார்ஷல் சரத்பொன் சேகா தெரிவித்துள்ளார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமரர் மு.சிவசிதம்பரம் அவர்களின் மருமகன்
(மகள் நிராஞ்சலியின் கணவர்)



பேராசிரியர்
**H.D. தேவராஜ்**
(சென்னைப் பல்கலைக்கழகம்)

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 09.12.1954 மறைவு 09.08.2024

தங்க.முகுந்தன்
குடும்பம் (மூளாய்)
077 7279 238

(C-959)

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 - 02 - 1947



இறப்பு 09 - 08 - 2024

### சுப்பிரமணியம் ஜெயரத்தினம்

*கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜெயரத்தினம் அவர்கள் 09.08.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மாமாங்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகநாதன் - சிவனேசாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும் தவராணி(சித்திரா) அவர்களின் அன்புக் கணவரும் ஜெயப்பிரதாபன் (கண்ணன்), (முன்னாள் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் - நீதிவான் நீதிமன்றம் பருத்தித்துறை/ ஊர்காவற்துறை, சட்ட உத்தியோகத்தர் - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வவுனியா) அவர்களின் அன்புத் தந்தையும் சட்டத்தரணி காயத்திரி(நீதிமன்ற உரை பெயர்ப்பாளர் - நீதிவான் நீதிமன்றம் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும் மகாலிங்கம்(லண்டன்), மகேந்திரராணி, சிவநாதன், பவளராணி, காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நகுலேஸ்வரம் வீதி, கருகம்பனைச் சந்தியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கீரிமலை செம்பொன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

நகுலேஸ்வரம் வீதி,
கருகம்பனை.

*தகவல் : குடும்பத்தினர்*
மகன் - 077 371 8488

(237)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 14 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உள்ளது.**

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2வது காணி)
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1671)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

**077 814 7389**
**077 986 5457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடியேற்றத்துடன் ஆரம்பமானது நல்லூரானின் பெருந்திருவிழா









வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்றுக் காலை 10 மணிக்கு பக்தி பூர்வமாகக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இதன்போது பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதுடன் பல அடியவர்கள் அங்கப்பிரதட்சணம் செய்து தமது நேர்த்திக் கடன்களில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ந்து 25 நாட்கள் மஹோற்சவத் திருவிழாக்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## வெளிவிவகார அமைச்சர் எகிப்திற்கு விஜயம்



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி எகிப்திற்கு விஜயம் செய்துள்ளார்.

எகிப்திய வெளிவிவகார அமைச்சர் படர் அபிடிலாட்டியின் அழைப்பின் பேரில் அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார். எகிப்திய வெளிவிகார அமைச்சர் மற்றும் முதலீட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஆகியோரை அமைச்சர் அலிசப்ரி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமையும் என தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# டிஜிற்றல் திரைகளால் மூளை வளர்ச்சி பாதிப்பு

## எச்சரிக்கை விடுக்கும் சுகாதார அமைச்சு

(கொழும்பு)

**டிஜிற்றல் திரைகளைப் பயன்படுத்துவதற்கு இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை அனுமதிப்பது பொருத்தமற்றது என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் விசேட வைத்திய நிபுணர் இனோகா விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்

டிஜிற்றல் திரைகளைப் பயன்படுத்துவதனால் சிறுவர்களின் மூளை வளர்ச்சி வீதம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

அதன்படி, பெரும்பாலான பெற்றோர் அதிக வேலைப் பளுவுக்கு மத்தியிலே தங்களது நேரத்தைச் செலவிடுவதால் தங்களது வேலைகளை இலகுவாக முன்னெடுப்பதறகாக அவர்கள் தங்களது குழந்தைகளிடம் கையடக்கத்தொலைபேசிகளை வழங்குகின்றனர்.

இந்நிலையில் குழந்தைகள் தொடர்ந்தும், கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்தும்போது அவர்களின் மனநிலையில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# ஹரின், மனுஷவின் கட்சி உறுப்புரிமை இரத்து

## அமைச்சர் பதவிகளை இழக்கும் நிலை

(கொழும்பு)

சமகால அரசாங்கத்தில் அமைச்சர்களாகச் செயற்படும் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் செல்லுபடியாகும் என உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்த இருவரும், கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளை பெற்றனர்.

இருவரின் முறையற்ற செயற்பாடுகளுக்கு அமைய ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் செயற்குழு, அவர்களின் கட்சி உறுப்புரிமையை ரத்துச் செய்தது. இதனை எதிர்த்து ஹரின், மனுஷ ஆகிய இருவரும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை விஜித் மலல்கொட, அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஹரீன் பெர்ணாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் அமைச்சர் பதவிகளை இழக்கும் நிலையேற்பட்டுள்ளது. (நி-6)

# சிறுவர்களிடையே அதிகரிக்கும் மூச்சுத்திணறல் அறிகுறிகள்

## வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

சிறுவர்கள் மத்தியில் தற்போது மூச்சுத்திணறல் அறிகுறிகள் அதிகரித்து வருவதாக வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

சிறுவர்களுக்கு ஏற்படும் இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சலினைத் தொடர்ந்து மூச்சுத்திணறல் அறிகுறிகள் அதிகரித்து வருகின்றன.

**காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்குமாயின்** உடனே அருகில் உள்ள வைத்தியரை நாடி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் சிறுவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோரின் கடமை எனவும் வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஐ.பி. எல் அணியில் பயிற்சியாளராக இருப்பதே விருப்பம்– பொண்டிங்



சர்வதேச அணிக்கு பயிற்சி யாளராக இருப்பதை விட ஐபிஎல் அணிகளில் பயிற்சியாளராக தொடர விரும்புவதாக ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ரிக்கி பொண்டிங் கூறியதாவது, இப்போது எனக்கு சர்வதேச அணிக்காக பயிற்சி யாளராக செயற்படுவதற்கு உண் மையில் எனக்கு நேரம் இல்லை என நினைக் கிறேன். ஏனெனில் ஒரு சர்வதேச அணியில் பயிற்சியாளராக இருக்க வேண்டும் எனில் அதற்காக அதிக நேரத்தை செலுத்த வேண்டும். மேலும் மற்ற சர்வதேச அணி களுக்கு பயிற்சியளிப்பதை ஒப்பீடு கையில் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு பயிற்சி அளிப்பது சற்று வித்தியாசமானது.

மேற்கொண்டு நான் மீண்டும் ஐபிஎல் தொடரில் ஒரு அணியின் பயிற்சியாளராக இருக்க விரும் புகிறேன். ஏனெனில் இத்தொடரின் ஆரம்ப நாட்களில் ஒரு வீரராக இருந்தாலும் சரி அல்லது மும்பையில் தலைமைப் பயிற்சி யாளராக இருந்த சில வருடங் களாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு வருடமும் நான் எனது சிறந்த செயற்பாட்டை வழங்கி இருக்கி றேன்.

மேலும் டெல்லி அணியில் கடந்த ஏழு சீசன்களாக பயிற்சி யாளராக இருந்த நிலையிலும், துரதிஷ்டவசமாக நான் விரும்பிய விதத்தில் எதும் நடக்கவில்லை என பாண்டிங் கூறினார். (நி-6)

## ஐ.சி.சி தர வரிசையில் இலங்கை முன்னேற்றம்



ஐசிசி வெளியிட்டுள்ள சமீபத்திய தரவரிசைப் பட்டியலில், இலங்கை ஒருநாள் கிரிக்கெட் அணி தர வரிசையில் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரை இலங்கை அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி யதையடுத்து தரவரிசையில் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது.

கொழும்பு ஆர் பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற மூன் றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிகெட் போட்டியை 110 ஓட்டங்களால் இலங்கை வெற்றி பெற்று தொடரை கைப்பற்றி இருந்தது.

இந்த போட்டியில் நாணய சுழற் சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்திருந்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக் களை இழந்து 248 ஓட்டங்களை பெற்றது.

பின்னர் 249 ஓட்டங்கள் என்ற வெற்றி இலங்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 26.0 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது.

இதன்படி 27 வருடங்களுக்கு பின்னர் இலங்கை அணியும் இந்திய அணியும் மாத்திரம் பங்கேற்ற ஒருநாள் தொடர் ஒன்றை இலங்கை அணி கைப்பற்றியுள் ளது.

கடந்த 1997 ஆம் ஆண்டே இந்திய அணிக்கு எதிரான இது போன்ற தொடரை இலங்கை அணி கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3192

### அபர்ணா

டாக்டர் என் பையனுக்கு போன மாசத்துல இருந்து பேச்சே வரல...
போன மாசம் ஏதாவது விபத்து நடந்ததா...?



அவன் கல்யாணம் நடந்தது டாக்டர்...

### தனுசன்

ஆசை தான் துன்பத்துக்குக் காரணம்னு இப்பதான் நான் தெரிஞ்சுக்கிட்டேன் சாமி
எப்படி...?



என் மனைவிய நான் ஆசைப்பட்டுத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்...

### கயல்விழி




### சரோன்

நண்பன மொத தடவ பாக்கும் போது ரொம்ப பயங்கரமான ஆளா இருப்பானோ



சில நாட்கள் கழித்து



ஜூம்பலக்கா ஜூம்பலக்கா

### காவியா



கணவன்:
செல்லம், உனக்கு தீபாவளிக்கு சேலை எடுத்து தரவா? இல்ல சுடிதார் எடுத்து தரவா...

மனைவி:
உங்களுக்கு எது துவைக்க ஈஸியா இருக்கோ, அதையே எடுத்து குடுங்க

### அர்ஷா



உங்க பொண்ணு சமைக்கவும் துவைக்கவும் கூடாதுன்னு இதெல்லாம் சீர்வரிசையா கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி மாமா



மாப்ள, இதெல்லாம் கல்யாணத்துக்குஅப்புறம் நீங்க கஷ்டப்படக்கூடாதுனு கொடுத்தது!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணித்தியாலத்தில் 148 பேருக்கு டெங்கு

(கொழும்பு)

**நாட்டில் கடந்த ஒன்பது நாட்களில் 1,050 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.**

கடந்த 24 மணித்தியாலங்களில் 148 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 33.795 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தில் இது வரையில் அதிகளவாக 13, 685 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். இவ் ஆண்டு இது வரை டெங்கு நோயால் 14 பேர் உயிரிழந்துள்ளனர். (நி-6)

## நல்லூரான் திருவடிக்கு... இன்று 2 ஆம் நாள் திருவிழா



## நல்லைக் கந்தவேளே!

அந்தமு மாதியும் மற்றவன் நல்லூரின்
ஆனந்த மானவுருவே!
விந்தைகள் புரிந்தெங்கள் சிந்தையி லுறைந்தவா
வேந்தனே ஞானகுருவே;
சிந்தனைக் குள்ளேயும் செறிந்தோங்கி நிற்கின்ற
தெய்வீக மானகருவே
வந்தனை செய்திங்கு வருவோர்க்கு நற்கதியை
வார்நல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்.


## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்




திரு.சரவணமுத்து நந்தகுமார்
(SLTS-I Sp.Tr.primary)

சேவை விபரம்
- யா/அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (28.11.1989- 09.02.1993)
- கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (10.02.1993- 31.12.1994)
- யா/அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (01.01.1995- 28.02.2002)
- யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை (01.03.2002- 22.06.2010)
- யா/கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (23.06.2010- 01.01.2018)
- யா/போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (02.01.2018- 09.08.2024)

எமது பாடசாலையின் ஆசிரியராக அர்ப்பணிப்பான சேவையை வழங்கி மணிவிழாக் காணும் நாயகனை மனதார வாழ்த்துகின்றோம். (P-954)

பாடசாலைச் சமூகம், யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை,கொடிகாமம்

## வாடகைக்கு உண்டு

யாழ். வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 5 பரப்பில் அமைந்த வீடும், யாழ். மின்சார நிலைய வீதியில் 3 மாடி கட்டடமும் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு (1663)

077 723 2535

## லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (227)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


## நலந்தரும் நல்லூரப்பா

முருகப்பா நல்லூர் குமரப்பா
மன்னவன் நீயே நல்லூர் மயிலப்பா
தேன்தமிழ் தெய்வமே நல்லூர் அழகப்பா
கவலைக்கு மருந்தாகும் நல்லூர் கந்தப்பா
நலம் நாடி வந்தேன் நல்லூர் பன்னிருகையப்பா
காத்தருள்வாய் நல்லூர் வேலப்பா
உன் நினைவே என்வாழ்வு நல்லூர் பழனியப்பா
மனநிறைவை தந்தருள்வாய் நல்லூர் மயுரேசப்பா

திருமதி செல்வரதி சரவணபவன், பிளவத்தை.

## இராசிபலன்

10.08.2024
ஆடி 25, சனிக்கிழமை
சஷ்டி பின்னிரவு 3.23 மணிவரை

சித்திரை பின்னிரவு 4.26 மணிவரை
சுபநேரம்- 3.04-4.34 மணிவரை
இராகுகாலம்-9.04-10.34 மணிவரை

சஷ்டி விரதம்
சந்திராஷ்டமம்
சதயம்.

வளவன்




நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும், இல்லத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு.




பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.




ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, உறவு, பகை பாராமல் உதவும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.




மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தேகநலனால் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.




தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.




சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.




பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், வழிபாட்டால் சிறப்பினைக்காண வேண்டிய நாள்.




தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை, சேமிப்பில் சிறிது கரையலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**துன்பம் நீங்க வேண்டுமாயின் கடவுளைத் தொழ வேண்டும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவுத்திருவிழாவும் விற்பனைக் கண்காட்சியும்





(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு படுத்தப்பட்ட உணவுத் திருவிழாவும் விற்பனைக் கண்காட்சியும் கடந்த திங்கட்கிழமை முற்றவெளிப் பகுதியில் இடம்பெற்றது.

85 இற்கும் மேற்பட்ட முயற்சியாளர்களை உள்ளடக்கிய வகையில் பாரம்பரிய உணவுகள், பனை சார் மற்றும் கைவினைப் பொருட்கள், தைத்த ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் மற்றும் வங்கிச் சேவைகளையும் கொண்ட 85 க்கு மேற்பட்ட கண்காட்சி விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. (நி-6)

# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)
சைவபரிபாலன சபை நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சைவபரிபாலன சபை ஆச்சிரம மண்டபத்தில் குறித்த சபையின் தலைவர் உ.தயானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி. சிவந்தினி வாகிசன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (நி-6)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)
ASHLYN & ABIGAIL MANGO MANSION RESTAURANTS திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு ஏ-9 வீதி ஆசைப்பிள்ளை ஏத்தம், மிருசுவிலில் இடம்பெறவுள்ளது. (நி-6)

# மனவளக்கலை யோக பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)
மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ். அறிவுத் திருக்கோவிலில் வேதாத்திரி மகரிஷி அருளிய மனவளக்கலை யோகா அடிப்படை பயிற்சிகள் ஆரம்பம்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்த பேராசிரியர்கள் வழங்குவார்கள்.

உங்களுடைய வசதிக்கேற்றவாறு பயிற்சி நேரங்கள் மாற்றி அமைத்து தரப்படும். மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# சரஸ்வதி முன்பள்ளியின் மெய்வல்லுநர் விளையாட்டு

(யாழ்ப்பாணம்)
பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 39 ஆவது மெய்வல்லுநர் விளையாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் பொற்பதி அறிவாலயம் மற்றும் சரஸ்வதி முன்பள்ளியின் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக விரிவுரையாளர் கலாநிதி. சுரேன் புராதனி தம்பதிகள் (லண்டன்), சிறப்பு விருந்தினராக பொறியியலாளர் சிவனேஸ்வரன் நவதீஸ்வரி தம்பதிகள் (நோர்வே) மற்றும் கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ச.சுரேஸ்குமார், யாழ். பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சிந்துசன் காவ்யா ஆகியோர் கலந்த கொள்ளவுள்ளனர். (நி-6)

# தனங்கிளப்பு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

## 5 பேர் கைது வாகனங்கள் பறிமுதல்



(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிப்பர் வாகனங்களை வியாழக்கிழமை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர்கள் ஐவரையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் மேற்படி வாகனங்களும் சந்தேக நபர்களும் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)



யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனுக்கு யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜே.ஏ. ஹாலிங்க ஜெயசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.இச் சந்திப்பில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)
நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர்மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று சனிக்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பி.ப 6.45 மணி.தொடக்கம் 7.25 மணிவரை இடம்பெறவுள்ள திருமுறை அரங்கில் பாட்டு-இ.திருஞானசம்பந்தன் ஓதுவார், உடன்பாடுபவர்-கு.மயூரதி, வயலின்- சி.திருமாறன், ஹார்மோனியம்-ந.செல்வச்சந்திரன், மிருதங்கம்- ம. லோகேந்திரன் மற்றும் முகர்சிங்-ஜெ. சாரங்கன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பிப 7.30 மணிக்கு இடம்பெறவுள்ள திருமுறை அரங்கில் பாட்டு- சிவராசா நவதீபன், வயலின்-ஈ.வனஜா, மிருதங்கம்- ப. ஞானவேல், முகர்சிங்-நி. மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் இறுதிக் கட்டப் பதிவுகள்



(வவுனியா)
காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தினால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான இறுதி கட்டப் பதிவுகள் நேற்று வவுனியா பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் பிரதானிகள் கலந்து கொண்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் இறுதி கட்டப் பதிவுகளை மேற்கொண்டதோடு விடயங்களையும் கேட்டறிந்திருந்தனர்.

எதிர்வரும் மாதம் அளவில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அவர்களுக்காக நஷ்டஈடும், சான்றிதழும் வழங்குவதற்கு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் நடவடிக்கை எடுத்திருப்பதாக தங்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர். (நி-6)

# முருங்கைக்காய் விலை வீழ்ச்சி செய்கையாளர்கள் பாதிப்பு

(தருமபுரம்)
அண்மைக்காலமாக ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் தற்பொழுது 40 ரூபாய் 50 ரூபாய்க்கு என கொள்வனவு செய்யப்படுவதாக முருங்கைச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ள முருங்கைகளை அறுவடை செய்ய முடியாது கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாக முருங்கை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.(நி-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும்

## அநுரகுமார உறுதி



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளுடனான கலந்துரையாடலின் போதே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனை தெரிவித்தார்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவது தற்போது பெரும் பிரச்சினையாக உள்ளதாக சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் தற்போது 35,000 வேலையற்ற பட்டதாரிகள் இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் சுங்கத் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்கள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான வேலை வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

அதன்படி வேலையற்ற பட்டதாரிகளுக்கு முதன்மைக் கவனம் செலுத்தி அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தனது அரசாங்கத்தின் கீழ் செயற்படுவதாக அவர் அங்கு உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஹரின் இடத்திற்கு ஹிருணிகா?

(கொழும்பு)

சுற்றுலா, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பதவியை, ராஜினாமா செய்த ஹரின் பெர்னான்டோவின் இடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவை நியமிக்குமாறு கட்சிக்குள் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்புரிமையை கட்சி நீக்கியமை, சட்டத்திற்குப்பட்டது என உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து, ஹரின் பெர்னான்டோ அமைச்சு பதவியை ராஜினாமா செய்திருந்தார். இதேவேளை தேசிய பட்டியல் ஊடாக ஹரின் பெர்னான்டோ பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைப்பு-சதொச

(கொழும்பு)

பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி 260 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கீரி சம்பா 248 ரூபாயாகவும், ஒரு கிலோ வெள்ளை சீனியின் விலை 9 ரூபாயாலும் குறைக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை 45 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், ஒரு கிலோ வெள்ளைப் பட்டாணியின் விலை 42 ரூபாயினாலும், இறக்குமதி செய்யப்படும் பச்சைப்பயறு, பச்சைப்பட்டாணி மற்றும் செம்பருத்தி கிலோ ஒன்றின் விலை 30 ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

இது தவிர, காய்ந்த மிளகாய், வெள்ளை அரிசி மற்றும் கொண்டைக்கடலை ஆகிய வற்றின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. (நி-6)

# தேர்தல் விதிமீறல்கள்

## ஒரே நாளில் 20 முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவுக்கு 24 மணிநேரத்திற்குள் மொத்தம் 20 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், முகாமைத்துவ நிலையத்திற்கு 11 தேசிய தேர்தல் முறைப்பாடுகளும் ஒன்பது மாவட்ட தேர்தல் முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு நேற்று முன்தினம் அதிகாலை முதல் மாலை 4.30 மணி வரை 20 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் பெறப்பட்ட அனைத்து முறைப்பாடுகளும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானவை எனவும் அத்தோடு, செயல்முறையை சீரமைக்கும் முயற்சியில் தேர்தல் புகார்களை முறைப்படுத்த தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறி -2023/2024
### (அணி-II)

வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகுதிகளில் ஏதாவது ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

1. க.பொ.த.உயர்தரத்தில் 03 பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தேசிய தொழில் தகமை மட்டம்-4(NVQ-4) இனை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**கற்கைநெறிக்கான காலம்** - ஒரு வருடம் (இரண்டு அரையாண்டுகள்-வார இறுதி நாட்கள்)

**கற்கைநெறி மூலம்** - நிகழ் வழி மூலமாக இடம்பெறும்.(Zoom Classes)

**கற்கைநெறி மொழி** - தமிழ்

| | |
|---|---|
| **கற்கைநெறிக்கான கட்டணம்** | ரூபா. 70,000.00 |
| விண்ணப்பப்படிவம் | ரூபா 1,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா 2,000.00 |
| கல்விக் கட்டணம் | ரூபா 60,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | ரூபா 6,000.00 |
| நூலகக்கட்டணம் (திரும்பப்பெறத்தக்கது) | ரூபா 1,000.00 |

இக் கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவத்தினை www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தின் https://forms.gle/hwpehtr6ucD85b8AA இணைப்பின்வழி பூர்த்தி செய்து உயர்தர கல்வித்தகைமை(A/L) சான்றிதழ் பிரதியையும் விண்ணப்பக் கட்டணம் 1000/=ஐ மக்கள் வங்கிக் கிளையில் 890022700002592 எனும் கணக்கிலக்கத்தில் வைப்புச்செய்து, வங்கிப் பற்றுச்சீட்டின் பிரதியையும் தரவேற்றம் செய்து 09.09.2024 இற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பதிவாளர்
09.08.2024



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1979-இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:56<br>7இல் செவ்<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்:O/L, பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B /14711 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா-23 1/2<br>12இல் செவ்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: BFA, DO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14718 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்:A/L, Computer Operator<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் வெளிநாடு<br>தொ.இ: B/14713 | பிறப்பு-2001-இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:2<br>11 இல் செவ்<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ: G/14721 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்:அனுஷம்<br>கி.பா: 28 1/4<br>உயரம் :6'<br>தகைமை/தொழில்: Marine Engineering (UK)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14714 | பிறப்பு:2000-இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:குணமான மணமகன்<br>தொ.இ: G/14723 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வயநாட்டில் மீண்டும் நில அதிர்வு!



(டில்லி)

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்திற்கு உட்பட்ட குறிச்சியர்மலை, மூரிக்காப்பு, கொம்பு அம்புகுத்தி மலை போன்ற பகுதிகளில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத்தொடர்ந்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

நில அதிர்வு உணரப்பட்ட பகுதிகளுக்கு விரைந்த வருவாய்த்துறை அதிகாரிகள் அங்கு ஆய்வு மேற்கொண்டனர். இந்த நில அதிர்வால் மக்களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. மேலும் பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

வயநாட்டில் கடந்த 30 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் நிலச்சரிவில் சிக்கி 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மீண்டும் நாடு திரும்பும் ஷேக் ஹசீனா



(டாக்கா)

பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் தேர்தலை அறிவித்த பின்னர் ஷேக் ஹசீனா நாடு திரும்புவார் என ஷேக் ஹசீனாவின் மகன் சஜீப் வசீத் ஜாய் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள அமைதியின்மைக்கு பாகிஸ்தானே காரணம் எனவும் சஜீப் வசீத் குற்றம் சுமத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் பங்களாதேஷின் நிலைமையில் வெளிநாட்டு தலையீடுகள் அவதானிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் ஐ. எஸ் புலனாய்வுப் பிரிவு ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (நி-6)

## இராணுவ வீரர்களை கண்ணீருடன் வழியனுப்பிய வயநாட்டு மக்கள்

(டில்லி)



வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் இரவும் பகலுமாக மீட்புப்பணிகளை மேற்கொண்ட இராணுவ வீரர்களை மக்கள் கண்ணீரோடு வழியனுப்பி வைத்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவு ஏற்பட்ட ஜீலை 30 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை 10 நாட்களாக, இரவு பகல் பாராமல் உயிருக்கு போராடியவர்களை மீட்டது இராணுவம் உள்ளிட்ட மீட்புப்படை. மண்ணில் புதைந்து மாண்டவர்களை தோண்டித் தோண்டி எடுத்து உறவினர்களிடம் ஒப்படைத்த வீரர்களுக்கு கண்ணீரை நன்றியாக தந்தனர் உயிரிழந்தவர்களின் உறவினர்கள்.

நிலச்சரிவில் உருக்குலைந்த முண்டக்கை, மேப்பாடி மற்றும் சூரல் மலை உள்ளிட்ட மலைக் கிராமங்களுக்கு விரைந்த இராணுவ வீரர்கள் உள்ளிட்ட மீட்பு வீரர்கள் மீட்பு பணிகளை தொடர்ந்தனர்.

மண்ணில் புதைந்த மனித உடல்கள் மற்றும் உடல் உறுப்புகளை தேடித் தேடி எடுத்துக் கொடுத்த சம்பவங்கள் காண்போரை கண் கலங்கச் செய்தது. எல்லா இன்னல்களுக்கும் இடையே சரியான உணவைக் கூட எடுத்துக் கொள்ளாமல் பிஸ்கட், பாண் உள்ளிட்ட உணவுகளை மட்டும் எடுத்துக் கொண்டு இரவுபகலாக உழைத்தனர் மீட்பு வீரர்கள்.

அத்தனையையும் தாண்டி நிலச்சரிவால் துண்டிக்கப்பட்ட முண்டக்கை சூரல்மலையை இணைக்கும் விதமாக 31 மணி நேரமாக போராடி 190 அடி தூரம் கொண்ட தற்காலிக பாலத்தையே அமைத்து சாதித்தனர் இராணுவ வீரர்கள்.



ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. ஒருசிலர் உயிரோடு மீட்கப்பட்டனர். இவ்வாறாக பணி செய்த இராணுவம், தங்களது பணியை முடித்துக்கொண்டு நேற்று முன் தினம் விடை பெற்றுள்ளது. அவர்களுக்கு தேசிய கீதம் முழங்க, கைத்தட்டி கண்ணீரோடு விடை கொடுத்துள்ளனர் கேரள மக்கள். (நி-6)

## அழிவை நோக்கி நகரும் அவுஸ்திரேலிய பவளப்பாறைள்

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய பவளப் பாறையான கிரேட் பேரியர் ரீஃப் பருவ நிலை மாற்றத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக சமீபத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

கடந்த 400 ஆண்டுகளுக்குப் பின்னர் அதிகரித்துள்ள வெப்பநிலையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பவளப்பாறை ஆபத்தான நிலையில் காணப்படுவதாக முன்னணி ஆராய்ச்சியாளர் வைத்தியர் பெஞ்சமின் ஹென்லி தெரிவித்துள்ளார்.

கடலின் வெப்பநிலை தொடர்ந்தும் அதிகரித்துள்ளதால் உலகெங்கிலும் உள்ள பவளப் பாறைகள் வெண்மையாகி அழிந்து வருவதாக அமெரிக்க தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்திருந்தது.

அத்துடன், உலகின் பெரும்பாலான பவளப்பாறைகள் ஐந்தாவது முறையாக வெண்மையடையும் ஆபத்தில் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பவளப்பாறைகள் அழிவதைத்தடுக்க முடியும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வயது – 9
# புதிய சட்டமூலத்திற்கு எதிராக ஈராக் பெண்கள் போராட்டம்!




(பக்தாத்)

**ஈராக்கில் பெண்களின் திருமண வயதை 9 ஆக குறைக்கும் சர்ச்சைக்குரிய சட்டமூலம் அந்நாட்டின் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

இதன்படி ஆண்குழந்தைகளுக்கு 15 வயதிலும், பெண் குழந்தைகள் 9 வயதை எட்டியதும் திருமணம் செய்து வைக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுவரை ஈரானில் பெண்களின் திருமணத்துக்கான சட்டபூர்வ வயது 18 ஆக உள்ளது. ஆனால் தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்தின்படி, பெற்றோர் மற்றும் நீதித்துறை சம்மதத்தில் 9 வயதில் பெண்களை திருமணம் செய்து கொடுக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

சட்டபூர்வ வயது 18 ஆக இருந்தாலும் ஏற்கனவே ஈராக்கில் 28 சதவீத பெண்களுக்கு அந்த வயதை எட்டும் முன்பே திருமணம் செய்துவைக்கப்பட்டுள்ளது என்று ஐநாவின் குழந்தைகள் அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ள நிலையில் தற்போதய இந்த வயது தளர்வு, ஈராக்கில் அதிகபடியான குழந்தைத் திருமணத்தை ஊக்குவிக்கும் என்று அஞ்சப்படுகிறது. எனவே இந்த சட்டமூலத்துக்கு எதிராக ஈராக் பெண்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (நி-6)

## எதிரியை சதியால் வீழ்த்த முயன்ற ரஷ்ய செஸ் வீராங்கனை



(மொஸ்கோ)

ரஷ்யாவின் தாகெஸ் தானில் செஸ் போட்டி நடை பெற்றது. இந்தப் போட்டியின் போது வீராங்கனையான ஒஸ்மானோவா திடீரென நோய்வாய்ப் பட்டார். இதை யடுத்து அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், இந்தப் போட்டியில் ரஷ்ய வீராங்கனை அமினா அபக ராவோ தனது எதிரிக்கு விஷம் வைத்ததாக குற்றம்சாட்டப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக போட்டி அமைப்பாளர்கள பொலிஸில் புகார் கொடுத்தனர். அதன் பேரில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

மேலும் அங்கிருந்த சி.சி.டி.வி. கமராவையும் ஆய்வு செய்தனர்.

அதில், செஸ் வீராங்கனை அமினா போட்டி நடைபெறும் இடத்திற்குள் நுழைகிறார். போட்டி தொடங்கும் முன் அமினா அபகரோவா தனது எதிராளியின் மேசையை அணுகி செஸ் போர்டில் பாதரசத்தை தெளிப்பது பதிவாகியுள்ளது.

இதையடுத்து, அமினா அபகராவோவுக்கு விளையாட தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (நி-6)

## அணு ஆயுத ஏவுகணைகளை ஈரானுக்கு வழங்கும் பாகிஸ்தான்

(டெஹ்ரான்)

அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் இடையிலான மோதல் காரணமாக உலகப் போர் மூளும் அபாயம் ஏற்பட்டு உள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு மத்தியில் ஷஹீன் II எனப்படும் தொலைதூர பாலிஸ்டிக் அணு ஆயுத ஏவுகணைகளை ஈரானுக்கு அனுப்ப பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் அணு ஆயுதங்களை ஈரான் உருவாக்கும் பட்சத்தில் அதை பாகிஸ்தானின் இந்த ஏவுகணையைப் பயன்படுத்தி இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளைத் தாக்க முடியும்

செங்கடலில் இருக்கும் அமெரிக்காவின் போர்க்கப்பல்களையும் கூட இதன் மூலம் ஈரான் தாக்க முடியும். ஈரானுக்கு ஏவுகணைகளை அனுப்ப பாகிஸ்தான் முன் வந்ததாக வெளியான செய்திக்கு அமெரிக்கா தற்போது பதிலடி கொடுத்துள்ளது.

வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரீன் ஜீன்-பியர் கூறுகையில், இஸ்ரேலுக்கான எங்கள் ஆதரவில் நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கிறோம்.

மேலும் இஸ்ரேல் தங்களைத் தற்காத்துக் கொள்ள எல்லா உரிமையும் உள்ளது. அவர்களுக்கு உறுதுணையாக இருப்பதை நாங்கள் உறுதி செய்கிறோம். ஈரானுக்கு ஏவுகணைகள் அனுப்பப்படுவது தவறான முடிவு. இதை எந்த நாடு செய்தாலும் நிலைமையை மோசமாக்கவே செய்யும் என அவர் தெரிவித்தார். (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலில் வாக்களிப்பதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லாவிட்டால் தற்காலிக அடையாள அட்டை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை அல்லது அதற்கு சமமான வேறு ஆவணங்கள் இல்லாவிட்டால் அவ்வாறான வர்களுக்கு தற்காலிக அடையாள அட்டையை விநியோகிக்கத் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கிராம சேவை உத்தியோகத்தரிடம் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதனூடாக தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள முடியுமென்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் தேசிய அடையாள அட்டை இல்லாவிட்டால் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது கடவுச்சீட்டு அல்லது ஆட்பதிவுத் திணைக்களத் தினால் வழங்கப்பட்ட ஆவணம் அல்லது ஓய்வு பெற்றோருக்கான ஆவணம் என்பவற்றை வாக்களிப்பு செயற்பாடுகளுக்காக பயன்படுத்த முடியும்.

இவற்றில் எதுவும் இல்லாவிட்டால் தேர்தல் ஆணைக் குழுவினால் தேர்தலுக்காக தற்காலிக அடையாள அட்டையொன்றை வெளியிடுவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## பதவி விலகினார் சரத் பொன்சேகா



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப் பினர் ஜே.சி. அலவத்துவல இதனைத் தெரிவித்துள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 260 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 350-400 | 400 |
| தக்காளி | 250 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 120-150 | 200 |
| கோவா | 300 | 350 | 300 | 400 |
| கரட் | 300 | 320 | 300 | 320 |
| பூசணி | 180 | 160 | 150 | 200 |
| புடோல் | 100 | 150 | 140 | 200 |
| வாழைக்காய் | 200 | 280 | 200-250 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250-400 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 230 | 220 |
| பாகற்காய் | 300 | 800 | 450 | 500 |
| வெண்டக்காய் | 150 | 140 | 200-250 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 170 | 150 | 240 |
| பயற்றங்காய் | 250 | 300 | 200-300 | 320 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 350 |
| பீற்றூட் | 350 | 300 | 300 | 200 |
| கறிமிளகாய் | 600 | 900 | 400 | 1200 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 40-60 | 100 |
| போஞ்சி | 600 | 700 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 100 |
| தேசிக்காய் | 600 | 200 | 400-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80-130 | 80-120 |
| இராசவள்ளி | -- | 800 | 200 | 700 |
| வெங்காயப்பூ | 150 | 150 | -- | 350 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 60 | 80 | 80 |

## இன்று ஒரு தகவல் 207



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மனித இயல்புகள்

இந்த உலகத்திலே ஒவ்வொரு உயிரினத்திற்கும் என்று ஒவ்வொரு குணம் இருக்கிறது.

ஒரு நாய் இருக்கிறது அதனுடைய குணம் என்ன என்று நமக்கு தெரியும். ஒரு கழுதை இருக்கிறது அதனுடைய குணம் என்ன என்று நமக்குத் தெரியாதா? ஒரு குரங்கு இருக்கிறது அது என்ன செய்யும் என்று நமக்குத் தெரியும். ஆனால் மனிதனுடைய குணம் என்ன என்று சரியாகச் சொல்லி விட முடியாது. அவன் சில நேரம் நாய் மாதிரி இருப்பான். சில நேரம் குரங்கு மாதிரி இருப்பான். எந்த நேரத்தில் என்ன மாதிரி இருப்பான் என்று தெரியாது. கண்டு பிடிப்பது கஷ்டம். பேச்சுக் கொடுத்து பார்த்தால் தான் தெரியும். பதில் வரும் தொனியை வைத்தே ஓகோ இவர் இந்த அவதாரத்தில் இருக்கிறார் நாம் தான் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொள்ளலாம்.

அது சரி மனிதன் ஏன் இப்படி எல்லாம் நடந்து கொள்கிறான்.ஒரு புராணக்கதையை கேட்டீங்கள் என்றால் அதன் பின்பு இப்படி கேள்வி எல்லாம் கேட்க மாட்டீர்கள்.

ஆண்டவன் என்ன செய்தார் தெரியுமா? ஜீவராசிகள்எல்லாவற்றையும் படைத்த பின்பு அது அதுக்கு என்று ஆயுள் காலத்தை முடிவு செய்ய வேண்டி இருந்ததாம்.

அவர் பார்த்திருக்கிறார். எல்லா ஜீவராசிகளையும் சமமாகத் தான் உண்டாக்கியிருக் கிறோம். இதுவே ஒவ்வொன்றுக்கும் வயது வித்தியாசம் என்னத்துக்கு எல்லாம் ஒரே மாதிரியே இந்த உலகத்தில் இருந்து விட்டு போகட்டும் என்று நினைத்தார்.

அதனாலே எல்லாவற்றுக்கும் சராசரியாக ஒரே தடவையாக 30 வருட ஆயுள் காலம் என்று முடிவு செய்தார்.

இதைக்கேட்டதும் ஒரு நாலு விதமான ஜீவராசிகளுக்கு மட்டும் இதிலே திருப்தி ஏற்பட வில்லை.

கழுதை.. நாய்.. குரங்கு .. மனிதன் இந்த நான்கும் தான்!

உடனே பகவானிடம் முறையிட விரும்பினார்கள். அதற்கு ஒரு வக்கீல் தேவைப் பட்டது.வேறு யாரு நாரதரிடம் நேராகச் சென்றார்கள். அவர் இவர்களின் வழக்கை எடுத்துக் கொண்டார். இவர்களை கடவுளிடம் அழைத்துக் கொண்டு போய் நிறுத்தினார்.

இவர்கள் எல்லாம் ஒவ்வொருவராக முறையிட ஆரம்பித்தார்கள். முதலில் கழுதை வந்தது.

இதோ பாருங்கள் கடவுளே நானோ நாள் முழுவதும் பொதி சுமந்து காலம் தள்ளப் போகிறேன். ரொம்ப கஷ்டப்பட்டு பொதி சுமக்கிற எனக்கு 30 வருட ஆயுள் மிகவும் அதிகம். நினைத்தாலே பயமாக இருக்கிறது. கொஞ்சம் குறைத்தால் பரவாயில்லை என்றது.

பகவான் சொன்னார் நீ சொல்வது நியாயம் தான் என்று கூறி அதன் ஆயுளை 18 வருடமாகக் குறைத்தார்.

அடுத்த படியாக நாய் வந்து நின்றது!

சாமி என்னுடைய பிழைப்போ நாய் பிழைப்பு எனக்கு என்னத்திற்கு 30 வருடம் அவ்வளவு நாள் நான் கஷ்டப்படணுமா என்றது.

அதுவும் சரி தான் என்று நினைத்தார் கடவுள். சரி உன்னுடைய ஆயுளை 12 வருடமாக குறைத்து விடுகிறேன் என்றார். நாய் சந்தோசமாக வாலை ஆட்டிக் கொண்டே சென்றது.

அடுத்ததாக குரங்கு வந்து நின்றது. சாமி என்னுடைய சேட்டைகள் எப்படி என்பது உங்களுக்கே தெரியும். எப்போது பார்த்தாலும் மரத்திலும் கிளையிலும் தொங்கிக் கொண்டு இருக்கப் போகிறேன். எனக்கு எதற்கு முப்பது வருடம் என்றது. சாமி அதையும் பார்த்து விட்டு அதையும் பத்து வருடமாக குறைத்து விட்டார். குரங்கிற்கு மிகவும் சந்தோசம் ஒரே தாவாக தாவி அங்கிருந்து வந்து விட்டது. கடைசியாக மனிதன் கடவுள் முன்னால் போய் நின்றார்.

ஈஸ்வரா எனக்கு 30 வருடம் பத்தாது. நான் இந்த உலகத்திலே நிறையச் சாப்பிட வேண்டி இருக்கிறது. நிறையத் தூங்க வேண்டி இருக்கிறது. நிறைய அனுபவிக்க வேண்டி இருக்கிறது. அதனாலே என்னுடைய ஆயுளைக் கொஞ்சம் அதிகப்படுத்தினால் நல்லது என்றான். கடவுள் யோசித்தார் ஆயுளை அதிகப்படுத்தினால் அதிலே பிரச்சினைகள் இருக்கிறதே பூமியிலே இப்பிரச்சினை எல்லாம் வருமே என்று தயங்கினார். அதைப் பார்த்த உடனே மனிதனே அதற்கு ஒரு வழியையும் சொன்னான்.

எதற்காக யோசிக்கிறீர்கள் கழுதையிலே குறைத்த 12 வருடம், நாயிலே குறைத்த18 வருடம், குரங்கிலே குறைத்த 20 வருடம் இவை எல்லாவற்றையும் சேர்த்து எனக்கு கொடுத்து விடுங்கள் உங்களுக்கும் கணக்கு உதைக்காது என்றான்.

சரி அப்படியே ஆகட்டும் என்றார் கடவுள். அதனுடைய பலன் என்ன என்பது இப்போது தான் புரிகிறது. ஏற்கனவே அப்படி முடிவானதாலே தான் மனிதன் 30 வருடம் வரைக்கும் சந்தோசமாக இருக்கிறான். இது அவனுக்கு விதிக்கப்பட்ட ஆயுள். அடுத்த 12 வருடங்கள் கழுதையிடம் வாங்கியது.

அது தான் கழுதை மாதிரி குடும்ப பாரத்தை சுமக்கின்றான். அடுத்த 18 வருடம் நாயிடம் வாங்கியது. அது தான் அந்த சமயத்தில் சொத்து சேர்ப்பதற்காக, இல்லை என்றால் சேர்த்த சொத்தைக் காப்பாற்றுவதற்காக நாய் மாதிரி அலைகிறான் இல்லை என்றால் காவல் காக்கின்றான்.

அடுத்த 20 வருடம் குரங்கிடம் வாங்கியது.வயதாகி மரியாதை போய், யார் என்ன சொன்னாலும் அவர்கள் சொல்கின்ற மாதிரி நடக்க வேண்டிய நிலைமை.

அன்று வாங்கிய ஆயுள் கடன் இன்று வரை மனிதனை என்ன பாடுபடுத்திக் கொண்டு இருக்கிறது பார்த்தீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA
## CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING (CODL)
## Diploma in Professional English
## Batch-IV

Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applications from the eligible candidates to follow the above course conducted by Department of English Language Teaching (DELT), Faculty of Arts, University of Jaffna.

**PROGRAMME OBJECTIVES**

This course has been designed to:

- Equip the professionals and students with English language proficiency to fulfill their day-to-day professional and higher educational requirements.
- Broaden the language skills of the professionals with advanced proficiency in English language structure, technical writing, advanced reading skill, business communication and presentation skills to perform confidently in any practical situations that require a higher degree of fluency, accuracy, efficiency and effectiveness.
- Enhance adequate and uniform proficiency level in English language to encounter the global and national demands in their respective fields.
- Develop Basic Interpersonal Communicative Skills (BICS) and abilities in English and make them conversant in the language.
- Promote all the basic language skills: reading, listening, writing and speaking.

**DURATION**

- The duration of the course is **one year** which consists of **two semesters**.
- Classes will be held at weekends only.

**SELECTION CRITERIA**

- A Candidate must sit for a written examination to check the ability in basic reading and writing skills.The duration of the examination is one hour.
- The candidates will be called for an interview based on the marks scored in the written examination to assess the basic oral proficiency in English.
- Based on the overall performances, 50 candidates will be selected at a time with a reserve list.

**COURSE FEE**

| | |
|---|---|
| Application Form | Rs 500.00 |
| Registration Fee | Rs 750.00 |
| Library Deposit (Refundable) | Rs 750.00 |
| Library Usage | Rs 1000.00 |
| Course Fee | Rs 40,000.00 |
| **Total** | **Rs43, 000.00** |

**Registrar**
**University of Jaffna**

(c-956)

**ENTRY REQUIREMENTS**

- An applicant must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream in one sitting and a pass in English at G.C.E A/L or a credit pass in G.C.E O/L.

**INSTRUCTIONS**

- Application could be obtained from the Centre for Open and Distance Learning, University of Jaffna during 9.00am to 4.00pm on weekdays.

**Or**

- Application form can be downloaded from website **(www.codl.jfn.ac.lk)**
- Duly filled application along with the payment slip for a sum of 500/= which should pay at any branch of the **People's Bank** island wide using the usual deposit slip. Keep a photocopy of the slip with you. (**Acc.No.-890042300001091**)
- To be sent under registered cover to the following address **on or before 30.08.2024.**
  It should be mentioned **"Diploma in Professional English"** on the left hand corner of the envelope.

Assistant Registrar,
Centre for Open and Distance Learning,
University of Jaffna,
Thirunelvely.




வவுனியா வடக்கு வலய சாரண ஆசிரியர்களுக்கு கலைக்கூறு-1 பயிற்சியானது வவுனியா மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 7, 8 ஆம் திகதிகளில் ஓமந்தை மத்திய கல்லூரியில் வவுனியா மாவட்ட சாரண ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. (படம்:வசந்தரூபன்)

# இரத்ததான முகாம்



(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு மன்னார் ரோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் சங்கர் நினைவாகவும் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இரத்ததானம் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் இளைஞர்கள் யுவதிகள் மற்றும் குருதி வழங்கும் கொடையாளர்கள் என 40 இற்கும் மேற்பட்டவர்கள் குருதியினை வழங்கியிருந்தார்கள்.

இதன்போது குருதிக் கொடையாளர்களுக்கு குருதிக் கொடைக்கான பதிவுப் புத்தகம், அத்தாட்சிப் பத்திரம் மற்றும் நினைவுச் சின்னம் போன்றவை வழங்கி வைக்கப்பட்டது. (நி-6-285)

# போலி விளம்பரம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுங்கள்

## கணனி அவசர தயார்நிலைக்குழு

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் வெளிவரும் போலி விளம்பரங்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இலங்கை கணனி அவசர தயார்நிலைக் குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தேர்தல் ஆணைக்குழுவினரால் பல்வேறு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாக பல்வேறு விளம்பரங்கள் வெளியாகி வருகின்றன.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இத்தகைய போலி விளம்பரங்களை அழுத்திப் பார்வையிடுவதற்கு முன்னர் சிந்தித்துச் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான போலி விளம்பரங்கள் இணையவழி மோசடிகளாகவும் இருக்கலாம் என இலங்கை கணனி அவசர தயார்நிலைக்குழு தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 3

காவியத் தொடர் 554





பின்னே இப்போது எதற்காக என்னைத் தேடி வந்தாய்?"

"என்னுடைய குதிரையைக் காட்டிலும் மேட்டிலும் விட்டுக் கொண்டு வந்தேன். இன்னும் வெகுதூரம் போயாக வேண்டும். குதிரைகளின் கால் குளம்புக்கு இரும்புக் கவசம் போடுவதாமே! அது உம்மால் முடியுமா?"

ஆம், அரேபியா தேசத்தில் அப்படித்தான் வழக்கம். இங்கேயும் சிலர் இப்போது குதிரைக் குளம்புக்கு இரும்பு லாடம் அடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். எனக்கும் கொஞ்சம் அந்த வேலையில் பழக்கம் உண்டு.

என் குதிரைக்கு லாடம் போட்டுத் தருவீரா?

அதற்கு நேரம் அதிகம் பிடிக்கும். கையில் உள்ள வேலையை முடித்துவிட்டுத் தான் உன் வேலையை எடுத்துக் கொள்ள முடியும்.

வந்தியத்தேவன் யோசித்தான், அவனுக்கும் களைப்பாயிருந்தது.

குதிரையும் கஷ்டப்பட்டுப் போயிருந்தது. சிறிது நேரம் காத்திருந்து அதன் குளம்புகளுக்குக் கவசம் போட்டுக் கொண்டே போவது என்று முடிவு செய்தான்.

கைவேலை முடியும் வரையில் காத்திருக்கிறேன், அப்புறமாவது உடனே செய்து தருவீர் அல்லவா? அதற்கென்ன, ஆகட்டும்!

வந்தியத்தேவன் சற்றுநேரம் கொல்லன் காய்ச்சிச் செப்பனிட்ட வாளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்த வாள் அபூர்வமான வேலைப்பாடு அமைந்ததாயிருக்கிறதே? இராஜகுலத்து வாள் மாதிரி அல்லவா இருக்கிறது? இது யாருடைய வாள்? என்றான்.

அப்பனே! இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் அரிச்சந்திர நதி என்று ஓர் ஆறு ஓடுகிறது. நானும் கேள்விப் பட்டிருந்தேன். அதனால் என்ன?

நான் அரிச்சந்திர நதிக் குச் சென்று அடிக்கடி தலை முழுகி வருவது வழக்கம். மிக்க நல்ல காரியம். போகும் இடத்துக்குப் புண்ணியம்.

ஆகையால் கூடிய வரையில் மெய்யே சொல்லுவதென்றும், பொய் சொல்லுவதில்லையென்றும் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

"அதற்கு என்ன ஆட்சேபம்? உம்மை யார் பொய் சொல்லச் சொன்னது? நான் சொல்லவில்லையே?"

"நீ என்னை இந்த வாளைப் பற்றி ஒன்றும் கேள்வி கேட்காமலிருந்தால், நானும் பொய் சொல்லாமலிருக்கலாம்!ஓஹோ! அப்படியா சமாசாரம்?" என்று வந்தியத்தேவன் மனத்திற்குள் எண்ணிக் கொண்டான்.

"நான் கேள்வியும் கேட்கவில்லை. நீர் விரத பங்கமும் செய்ய வேண்டாம். கைவேலையைச் சீக்கிரம் முடித்துவிட்டு, என் வேலையை எடுத்துக்கொண்டு செய்து கொடுத்தால் போதும்!" கொல்லன் மௌனமாகத் தன் வேலையில் கவனம் செலுத்தினான்.

வந்தியத்தேவன் வாளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் அடிப்பகுதியில், பிடியின் பக்கத்தில் மீன் உருவம் பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து வியந்தான். மீன் உருவம் எதற்காக? அதற்கு ஏதேனும் பொருள் உண்டா? வெறும் அலங்காரத்துக்குத் தானா?

கொல்லன் அந்த மீன் உருவம் உள்ள இடத்தை மறுபடியும் தீயில் காட்டிக் காய்ச்சி அதன் பேரில் சுத்தியால் அடித்தான் மீன் உருவம் தெரியாமல் மறைப்பதுதான் அவனுடைய நோக்கம் என்று தோன்றியது.

எதற்காக இக்காரியம் என்று வல்லவரையன் யோசனை செய்தான். யோசனை செய்து கொண்டிருக்கும் போதே, அவன் கண்கள் சுழலத் தொடங்கின. பல நாளாக அவனால் விரட்டியடிக்கப் பட்டு வந்த நித்திராதேவி இப்போது தன் மோக மாய வலையை அவன் பேரில் பலமாக வீச ஆரம்பித்தாள். வந்தியத்தேவன் அதிலிருந்து தப்ப முடியவில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## நேர்மை உயர்வு தரும்

(நேற்றைய தொடர்ச்சி...)

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார். பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர் கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னதான் பரிசு கொடுக்கப் போறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நிற்பதை கண்ட ஊரார் சோமனை சும்மா விடக்கூடாது, இந்த பிரச்சினையை மரியாதை ராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர் மக்கள் அனைவரும் மரியாதை ராமன் முன்னால் போய் நின்றார்கள். சோமன் தான் பணப்பையையும், அதில் இருந்த வைர மோதிரம் தொலைத்த கதையையும், பூபாலன் தான் பணப்பை கண்டு பிடித்த கதையையும் சொன்னார்கள்.

ஏற்கனவே சோமன் அறிவித்த தண்டோரா பற்றி மரியாதை ராமனுக்கு தெரியும். அப்போ தண்டோரா [illegible] வைரமோதிரம் பற்றி ஒன்றும் சொல்லாததும் தெரிந்தது தான்.

ஆக மொத்தம் சோமன் ஏமாற்றுகிறான் என்பதை புரிந்துகொண்ட மரியாதை ராமன், சோமனுக்கு சரியான தண்டனை கொடுக்க நினைத்து இவ்வாறாக தீர்ப்பு கூறினார் 'சோமன் தொலைத்த பையில் பணமும், வைர மோதிரமும் இருந்தது என்று அவரே சொல்லியிருக்கிறார். இப்போது பூபாலன் கொண்டு வந்த பையில் பணம் மட்டுமே உள்ளது.

ஆக இது சோமனின் [illegible] அப்படி தொலைத்தவர் இதுவரை யாரும் புகார் கொடுக்கவில்லை. அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை நம்ம ஊர் வழக்குப்படி கிடைத்த பணத்தில் 10 பங்கு அம்மன் கோயிலுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக்கொள்ளலாம்.

ஆக பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளலாம். சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையை கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார். சபை கலையலாம். மரியாதை ராமன் தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது.

பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

(முற்றும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நானே மிருதுவாக இருப்பின், நமது சொல் மற்றும் செயலால் யாரையும் காயப்படுத்த மாட்டோம். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாமலின் தேர்தல் பிரவேசம் சொந்தச் செலவில் சூனியம்

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு என்ன? என்ற எதிர்பார்ப்பு முற்றுப் பெற்றுள்ளது.

பொதுவில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதுதான் பொதுஜன பெரமுனவின் ஒரே வழி என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக இருந்தது.

அவ்விதம் ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சி ஆதரிக்கத் தவறும் பட்சத்தில், தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துகின்ற முடிவை மொட்டுக்கட்சி எடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

சவுவே, நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமென கடும் எதிர்பார்ப்புடன் இருந்த தம்மிக்க, அதற்கான வியூகத்தையும் அமைத்திருந்தார்.

ஆம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனை எனக்கு மிகவும் பிடித்தமானது.

அவருடைய அரசியல் கோட்பாடு காரணமாக அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதையும் ஏற்பட்டது என்றெல்லாம் தம்மிக்க நாமார்ச்சனை செய்தார்.

இருந்தும் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துகின்ற எண்ணம் மகிந்த தரப்பிடம் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட தம்மிக்க, எட்டாப்பழம் புளிக்கும் என்று கூறிவிட்டு மெல்ல விலகிக் கொண்டார்.

இனி, எதுவும் செய்ய முடியாது. ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால், பிரதமர் பதவி நாமலுக்குத் தர வேண்டும் என்ற தமது கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்க நிராகரித்திருந்த நிலையில், மிகவும் கடுப்படைந்த பொதுஜன பெரமுன போனால் போகட்டும் என்ற கையறு நிலையில் நாமல் ராஜபக்ஷவை மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்துள்ளது.

அறிவிப்பு அட்டகாசமாக இருந்தாலும் தேர்தலில் நாமல் வெற்றி பெறுவதென்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று.

ஆக, தேர்தலில் நாமல் தோற்று இன்னொருவர் வெற்றி பெற்றால், நிலைமை எப்படியாகும் என்பதுதான் இங்கு சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம்.

ஆம், நாமல் ராஜபக்ஷவைப் பிரதமராக்குவேன் என்று ரணில் விக்கிரமசிங்க உத்தரவாதம் கொடுத்திருப்பாராயின், அவரை மொட்டுக்கட்சி ஆதரித்திருக்கும்.

ஆனால் நாமலை பிரதமராக்குவதாக உறுதிமொழி வழங்கினால், அது தன் தலையில் தானே மண்ணைக் கொட்டியதாக முடிந்து விடும் என்ற உண்மை ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரிந்திருந்தது.

இந்நிலையிலேயே அவர் நாமலை பிரதமராக்கும் நிபந்தனையை நிராகரித்திருந்தார்.

தவிர, ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை ராஜபக்ஷக்களைக் காப்பாற்றியவன் நான். எனவே அவர்கள் நிபந்தனையற்ற ஆதரவை எனக்குத்தர வேண்டும் என எதிர்பார்த்திருந்தார். இருந்தும் மொட்டுக்கட்சி காய்க்குள் பழமோடிவிட்டது.

இனி யார் ஜனாதிபதியாக வந்தாலும் ராஜபக்ஷக்களின் சொத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்துவர் என நம்பலாம்.

# இலங்கையை மீட்ட ரணில் போன்ற தலைவரே வங்கதேசத்துக்குத் தேவை

**பவித்ரா வன்னியாராச்சி**

தற்போதைய பங்களாதேஷ் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு தலைவரைத் தேடிக்கொண்டிருப்பதாக அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு துணிச்சலான தலைவர் பிறந்ததன் காரணமாகவே இலங்கை இவ்வாறான ஆபத்தான நிலைமையை மரபுரிமையாகப் பெறவில்லை எனவும் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுமொத்த பங்களாதேஷுமே நெருப்புக் குவியல் ஆகிவிட்டது. இன்று பங்களாதேஷ் ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவரைத் தேடிக்கொண்டிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு தலைவர் இந்த தாய் மண்ணில் பிறந்ததால் நமக்கு அந்த நிலை ஏற்படவில்லை.

மக்கள் போராட்டங்களைக் கண்டு அஞ்சி நாட்டின் தலைவர், நாட்டை விட்டு வெளியேறிய போது, ஒரு துளிகூட இரத்தம் சிந்தாமல் தாய் நாட்டின் அரசமைப்பை மீட்டெடுத்தவர் வேறுயாருமல்ல.

எனவே நாம் இன்று சகல நிறங்களையும் கட்சிகளையும் புறந்தள்ளி எமது கடமையில் இணைந்து கொள்கின்றோம் என்றும் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். (ம-7)

## ஜனாதிபதி வேட்பாளர்கள் 27ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று (09) வரையில் 27 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்களில் 13 பேர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாவர்.

ஏனையவர்களில் ஒருவர் அரசியல் கட்சி சார்பாகவும், ஏனைய 13 பேர் சுயேட்சை வேட்பாளர்களாகவும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## பெண்களுக்கும் சமவுரிமை கிடைக்க ஆவன செய்வேன்

**ஜனாதிபதி ரணில் உறுதி**

(கொழும்பு)

சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கி வருகின்ற நிலையில், நாட்டில் பெரும்பான்மையாகவுள்ள பெண்களின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துரைத்த அவர்,

"பெண்களை நான் மறக்கவில்லை. பெண்களை வலுவூட்டும் சட்ட மூலத்தை நாம் அங்கீகரித்துள்ளோம். நீங்கள் நாட்டின் பெரும்பான்மை. ஆண்களை போன்று, பெண்களுக்கும் சமமான உரிமையை பெற்றுக்கொடுப்பேன். சிங்கள பெண்கள், தமிழ் பெண்கள், முஸ்லிம் பெண்கள் என அனைவருக்கும் சமமான உரிமையை பெற்றுக்கொடுப்பதற்காகவே நாம் முதலாவது சட்டத்தை கொண்டு வந்தோம். ஆண்களைப் போன்று பெண்களுக்கும் சம உரிமையை பெற்றுக்கொடுக்க இன்னும் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்" என்றார். (ம-7)

## இலஞ்சம் பெற்றது உறுதி கான்ஸ்டபிளுக்கு சிறை

**வாக்குரிமையும் பறிப்பு**

(கொழும்பு)

மணல் டிப்பர் சாரதி ஒருவரிடம் 2,000 ரூபா இலஞ்சம் பெற்றமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே 8 வருட சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

அத்தோடு 20,000 அபராதமும் முறைப்பாடு செய்த டிப்பர் சாரதிக்கு 50,000 வழங்கவும் உத்தரவிடப்பட்டது.

குறித்த தண்டனைக் காலத்தில் குற்றவாளியின் வாக்குரிமையை இரத்துச் செய்யுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், நீண்ட விசாரணையின் பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம-7)

## இளவாலையில் நாளை இலவச மருத்துவ முகாம்

யாழ்பல்கலைக்கழகத்தின் 50வது ஆண்டினை முன்னிட்டு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பேராதரவோடு யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் மருத்துவ பீட மாணவர்களும், மருத்துவர்களும் இணைந்து நடாத்தும் "உயிர் நாடி" இலவச மருத்துவ முகாமானது நாளை ஞாயிற்றுக்கிழமை (11) இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் காலை 7.30 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

யாழின் பிரபல வைத்திய நிபுணர்கள் பலரும் கலந்துகொள்ளும் இவ் இலவச மருத்துவ முகாமில் பல்வேறுபட்ட மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளதோடு 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தொற்றா நோய்களுக்கான பரிசோதனையும் இடம்பெறவுள்ளதால் வருகை தரவிரும்புவோர் பரிசோதனைகளுக்கு ஏதுவாக 10 மணி நேரம் உணவு தவிர்த்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-7)

## கட்சி தாவுபவர்களினை கட்டுப்படுத்தப் புதிய சட்டம்

**அநுர குமார தெரிவிப்பு**

(கொழும்பு)

தேசிய மக்கள் அரசாங்கத்தில் கட்சித் தாவலை கட்டுப்படுத்துவதற்கான புதிய சட்டம் கொண்டு வரப்படும் என கட்சியின் தலைவர் அநுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சிகளில் ஒருபக்கத்திலிருந்து மற்றைய பக்கத்திற்கு தாவும் தவளைகள் நிறைய உள்ளன என தெரிவித்துள்ள அவர் கட்சித் தாவலில் அவர்கள் ஈடுபடும் கடைசித் தடவை இது தான் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அரசியல் இதன் காரணமாகவே ஊழலில் சிக்குண்டது என மேலும் தெரிவித்துள்ள அவர் இதனைக் கட்டுப்படுத்துவதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சட்டங்களை கொண்டுவரும், 19வது திருத்தத்தில் இது தொடர்பில் சில விடயங்கள் காணப்பட்டன. விஜயதாஸ அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார், தினேஸ் குணவர்த்தன அதனை நீக்க வேண்டும் என்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## பீடி இலைகளுடன் இளைஞன் கைது

(வென்னப்புவ)

வென்னப்புவ - அலுத்தொட்ட பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட 641 கிலோ 200 கிராம் பீடி இலைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை (08) வென்னப்புவ பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் 20 வயதுடைய அலுத்தொட்ட பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.

இதேவேளை, பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போது சில சந்தேக நபர்கள் தப்பியோடியதுடன் அவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
# கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

06

இக்குண்டு வெடிப்பின்போது காமினிதிசாநாயக்கவுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் டாக்டர் காமினி விஜே சேகர, முன்னாள் அமைச்சர்க ளான வீரசிங்க மல்லிமாராட்சி, ஜி. எம். பிரேமச்சந்திர உட்பட சுமார் 62 மனித உயிர்கள் பலியாக்கப் பட்டன.

இச் சம்பவத்தையடுத்து ஜனாதி பதியைத் தேர்ந்தெடுத்தல் தொடர் பான 1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டமூலத் தின் 22ஆம் உறுப்புரையின் (1) (2) (3) உட்பிரிவுகளுக்கமைய 3 தினங்களுக்குள் ஜனாதிபதி வேட் பாளர் ஒருவரை நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளர் 1994 ஒக்டோபர் 24ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சியைக் கேட்டுக் கொண் டார்.

1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டமூலத் தின் 22 (2) உறுப்புரையின்படி தேர்தல் ஆணையாளர் பெற் றுள்ள அதிகாரங்களுக்கமைய வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க (திரு. காமினி திசாநாயக்கவின் மனைவி) அவர்கள் ஐக்கியத் தேசியக் கட்சி யின் வேட்பாளராக ஏற்றுக் கொள் ளப்பட்டார். இந்த உத்தியோக பூர்வமான அறிவித்தல் 1994 ஒக்டோபர் 27ஆம் திகதி தேர்தல் ஆணையாளரினால் விடுக்கப்பட் டது. அத்துடன், திட்டமிட்டபடி 1994 நவம்பர் 09ஆம் திகதி நாடு பூராவும் காலை 7.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை தேர்தல் நடத்தப்படுமெனவும் உறுதிப்படுத்தப்பட்டது.

### அபேட்சகர் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளல்

மூன்றாவது ஜனாதிபதி தேர்த லில் அபேட்சகர் நிஹால் கலப்பதி அவர்கள் போட்டியிலிருந்து விலகிக் கொண்டமை இத்தேர்தலின் மற்று மொரு முக்கிய அம்சமாகும்.

நிறைவேற்று அதிகாரமிக்க அதாவது தனி அதிகாரமிக்க இலங்கை அரசுத் தலைவர் முறை ஒழிக்கப்படுமெனவும், அதே நேரம் தனிப்பட்ட ஒரு நபருக்கு அதிகாரம் வழங்கப்படுவதைத் தடுத்து பாராளுமன்றத்துக்கு பூரண பொறுப்புச் சொல்லக்கூடிய ஒரு நிர்வாக முறை ஏற்படுத்தப்படுமெனவும் பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளரும், பிரதம மந்திரியுமான சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மக்க ளுக்கு உறுதியளித்து எழுத்து மூலமாக அறிவிப்பாராயின் தான் போட்டியிலிருந்து விலகிக் கொள் வதாக ஸ்ரீலங்கா முற்போக்கு முன் னணி வேட்பாளர் திரு. நிஹால் கலப்பதி அவர்கள் 1994.10.20 ஆம் திகதியன்று பொதுசனத் தொடர்பு சாதனங்களினூடாக பகிரங்கமாக அறிவித்தல் விடுத்தார்.

இந்த சவாலை திருமதி சந்தி ரிக்கா குமாரதுங்க அவர்கள் ஏற்றுக் கொண்டார். 1995ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் திகதியில் தற்போ தைய அரசியலமைப்பு மாற்றிய மைக்கப்படும் எனவும், மாற்றியமைக் கப்படும் அரசியலமைப்பில் நிறை வேற்று அதிகாரம், கொண்ட நிறை வேற்று அதிகாரமிக்க இலங்கை அரசுத் தலைவர் பதவி ஒழிக்கப் படுமெனவும் 1994.10.21ஆம் திகதி இலங்கை ரூபவாஹினியில் இடம் பெற்ற விசேட பேட்டியில் திருமதி சந்திரிக்கா குமாரதுங்க குறிப்பிட் டார்.

1994.10.19 ஆம் திகதி பதுளை சேனநாயக்கா விளையாட்டு அரங் கில் நடைபெற்ற பொதுக்கூட்ட மொன்றில் நிறைவேற்று அதிகா ரமிக்க ஜனாதிபதி பதவி நீக்கப்பட்ட வேண்டியதன் அவசியத்தை விரி வான முறையில் இவர் விளக்கி யிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சந்திரிக்கா குமாரதுங்கவின் இந்நிலைப்பாட்டால் திருப்திய டைந்த கலப்பதி அவர்கள் 1994.10. 27 ஆம் திகதியன்று தான் போட்டி யிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். காமினி திசாநாயக்க பதிலாக காமினியின் மனைவி சிறிமதி திசாநாயக்க நியமிக்கப்பட் டார். ஆயினும் இவரால் சந்திரி காவின் பின்னால் திரண்ட மக்கள் எழுச்சிக்கு முகங்கொடுக்க முடிய வில்லை. 62.28% வீத வாக்கு களைப் பெற்று வரலாறுகாணாத வெற்றியுடன் சந்திரிகா குமாரதுங்க இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதியானார்.

### 4 ஆவது ஜனாதிபதித் தேர்தல் -1999

தனது புகழ் முற்றாக வீழ்ச்சிய டையுமுன்னரே அடுத்த ஜனாதிபதி தேர்தலை நடத்தி தனது வெற் றியை உறுதிபடுத்திக் கொள்ள விரும்பிய சந்திரிகா தனது முதலா வது ஆட்சிகாலம் முடிவடைவதற்கு சுமார் ஒருவருடம் முன்னதாகவே தேர்தலை நடத்தினார். நான்காவது ஜனாதிபதித் தேர்தல் 1999ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி நடைபெற்றது.

நிமயனப் பத்திரம் தாக்கல் செய்ததை நோக்கும் போது 3 ஜனாதிபதித் தேர்தல்களையும் விட அதிகமான அபேட்சகர்கள் நிய மனப்பத்திரம் தாக்கல் செய்தது இதுவே முதற்தடவை. இங்கு அங் கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மூலமாக 10 வேட்பாளர்களும், சுயேட்சையாக 3 வேட்பாளர்களும் நியமனப்பத்திரம் தாக்கல் செய் திருந்தனர்.

பின்வரும் அபேட்சகர்கள் நிய மனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

1. அப்துல் ரஸ்ஸாக் அப்துல் றசூல் (ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி), 2. அல்விஸ் வீரக்கொடி பிரேம வர்தனா (மக்கள் சுதந்திர ஒற் றுமை முன்னணிக்கட்சி), 3. ஆரியவங்ச திசாநாயக்க (ஜன நாயக ஐக்கிய தேசிய முன்ன ணிக்கட்சி) 4. மெஸ்டியகே தொன் நந்தன குணதிலக (மக்கள் விடு தலை முன்னணிக்கட்சி) 5. கமல் கருணதாச (மக்கள் விடுதலை ஒற்றுமை முன்னணிக்கட்சி)

6. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொதுஜன ஐக்கிய முன்னணிக்கட்சி) 7. டெனிசன் எதிரிசூரிய (சுயேட்சை) 8. மஹி மன் ரஞ்சித் (சுயேட்சை) 9. ரணில் விக்கிரமசிங்க ( ஐக்கிய தேசியக்கட்சி) 10. ராஜீவ விஜே சிங்க (லிபரல் கட்சி) 11. வாசுதேவ நாணயக்கார ( இடதுசாரி ஜன நாயக முன்னணிக் கட்சி) 12. ஹட்சன் சமரசிங்க (சுயேசை) 13. விஜேதுங்க முதலிகே ஹரிச் சந்திர விஜேதுங்க (சிங்களயே மகசம்மத பூமிபுத்திர கட்சி)

இலங்கையில் ஜனாதிபதி தேர் தல் வரலாற்றில் முஸ்லிம் வேட் பாளர் ஒருவர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்த முதல் சந்தர்ப் பம் இதுவாகும். முதலாவது ஜனா திபதித் தேர்தலில் திரு குமார் பொன்னம்பலம் வேட்பாளராக நிய மனப்பத்திரம் தாக்கல் செய்தி ருந்தார்.

(தொடரும்...)

### 3வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1994

வட மாகாணம்

| வேட்பாளர் | யாழ் மாவட்டம் வாக்குகள் | % | வன்னி மாவட்டம் வாக்குகள் | % |
|---|---|---|---|---|
| சந்திரிகா குமாரதுங்க | 16,934 | 96.35% | 33,585 | 85.30% |
| நிஹால் கலப்பதி | 25 | 0.14% | 118 | 0.30% |
| வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க | 223 | 1.27% | 4,493 | 11.41% |
| ஏ.ஜே.ரணசிங்க | 16 | 0.09% | 77 | 0.20% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | 36 | 0.20% | 96 | 0.24% |
| ஹட்சன் சமரசிங்க | 341 | 1.94% | 1,003 | 2.55% |
| செல்லுப்படியான வாக்குகள் | 17,575 | 99.20% | 39,372 | 98.30% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 141 | 0.80% | 681 | 1.70% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 17716 | 2.97% | 40,053 | 22.41% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 596,366 | | 178,697 | |

### 3வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1994

கிழக்கு மாகாணம்

| வேட்பாளர் | மட்டக்களப்பு மாவட்டம் வாக்குகள் | % | திகாமடுல்லை மாவட்டம் வாக்குகள் | % | திருகோணமலை மாவட்டம் வாக்குகள் | % |
|---|---|---|---|---|---|---|
| சந்திரிகா குமாரதுங்க | 144,275 | 87.30% | 168,289 | 72,36% | 77,943 | 71.62% |
| நிஹால் கலப்பதி | 484 | 0.29% | 574 | 0.25% | 324 | 0.30% |
| வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க | 14,812 | 8.93% | 59,074 | 25.40% | 28,006 | 25.74% |
| ஏ.ஜே.ரணசிங்க | 381 | 0.23% | 496 | 0.21% | 195 | 0.18% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | 349 | 0.21% | 471 | 0.20% | 279 | 0.26% |
| ஹட்சன் சமரசிங்க | 5,028 | 3.03% | 3,677 | 1.58% | 2,074 | 1.91% |
| செல்லுப்படியான வாக்குகள் | 165,779 | 98.42% | 232,581 | 98.47% | 108,821 | 98.44% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,664 | 1.58% | 3,621 | 1.53% | 1,726 | 1.56% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 168,443 | 64.32% | 235,202 | 75.70% | 110,547 | 60.05% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 261,897 | | 312,006 | | 184,090 | |

### 3வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1994

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் | |
|---|---|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க | பொதுசன ஐக்கிய முன்னணி | 4,709,205 | 62.28% |
| நிஹால் கலப்பதி | ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | 22,749 | 0.30% |
| வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க | ஐக்கிய தேசியக்கட்சி | 2,715,283 | 35.91% |
| ஏ.ஜே.ரணசிங்க | சுயேட்சை | 22.752 | 0.30% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | சிங்களே மகாசம்மத பூமிபுத்திர கட்சி | 32,651 | 0.43% |
| ஹட்சன் சமரசிங்க | சுயேட்சை | 58,886 | 0.78% |
| செல்லுபடியான வாக்குகள் | | 7,561,526 | 98.03% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 151,706 | 1.97% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | | 7,713,232 | 70.52% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | | 10,937,279 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35 இந்திய...

பயணித்த 4 படகுகளும் கைப்பற்றப் பட்டதாகக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித் துள்ளார்.

மன்னார்த் தீவை அண்மித்த தென் கடல் பகுதியில் வைத்து குறித்த இந் திய மீனவர்கள் கைதாகினர். (ம-7)

## கிளிநொச்சி...

யைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையின ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை யினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள் ளார்.

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் வசிக்கும் 24 வயதுடைய இளைஞ ரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து கைது செய்யப் பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணை களுக்காக அம்பாறை லாஹுகல வனஜீவராசிகள் திணைக்களத்தினரி டம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

## திருவெண்காட்டில்...

பெறும் மகோற்சவத்தில் 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 19ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ந)

## துவிச்சக்கர...

பிரதான வீதியில் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் படு காயம் அடைந்த குறித்த நபர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கடந்த புதன்கிழமை மாலை பாட சாலை முடிவடைந்து தனது பேரனை துவிச்சக்கரவண்டியில் ஏற்றிக் கொண்டு வீடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த 67 வயதுடைய நபர் மீது வீதியூடாக அதிவேகமாக பயணித்த சூலர் வாகனம் மோதி விபத்தை ஏற் படுத்தியது.

இதன்போது காயமடைந்த பேர னான மாணவனும், வயோதிபரும் உட னடியாக மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல் லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இதன்போது நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 67 வயது டைய குறித்த நபர் சிகிச்சைப் பல னின்றி யாழ்.போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

சூலர் வாகனத்தின் சாரதியை கைது செய்த மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரு கின்றனர். (ம-7,285)

## கிளிநொச்சி - ஆனை...

முந்தவராவார்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கிப் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேற்று அதி காலை ஆனையிறவுப் பகுதியில் ஒன் றன்பின் ஒன்று மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தின்போது, ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் ஏனைய மூன்று பேரும் பலத்த காயங் களுடன் கிளிநொச்சி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை கிளி நொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,315,316)

## கனடா...

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன்போது யாழ்ப்பாண வணிகர் கழகம், யாழ்ப்பாண முகாமையாளர் நிறுவனம், யாழ்ப்பாண முகாமைத்துவ கழகம் மற்றும் திருகோணமலை வர்த் தக அமையம் ஆகிய நிறுவனங்கள் குறித்த பரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், யாழ்ப் பாண வணிகர் கழகத் தலைவர் இ.ஜெய சேகரம், இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத் தலைவர் பிரியந்த சந்திரசேகர உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

## அமைச்சுப்...

நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்காரவும், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், சுற்றுலா மற்றும் காணி அமைச்சராக ஹரின் பெர்னாண்டோவும் பணியாற்றினர்.

நேற்றுப் பிற்பகல் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய இருவரும், நீதிமன்றத்தின் தீர்ப்புத் தொடர்பில் தமக்கு எவ்வித வருத்தமும் இல்லை எனவும், அமைச்சர்களாகப் பதவி வகித்த காலத்தில் தங்களால் இயன் றளவு பொறுப்புக்களை நிறைவேற்ற முடிந்ததாகவும் தெரிவித்தனர்.

அமைச்சர்களான மனுஷ நாண யக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரின் கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டபூர்வ மானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித் தமையால் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தால், ஒவ்வொரு நபருக்கும் 200 மில்லியன் ரூபாய் செலவு செய்ய நேரிடும் என தான் நம்பு வதாகவும்,

"வாக்குச்சீட்டு அச்சடிக்கும் இயந் திரங்களிலும் ஒரு அளவு உண்டு. நீளம் தொடர்பானது. குறித்த அளவை மீறினால், வாக்குச்சீட்டின் வடிவத்தை மாற்ற வேண்டும். வாக்குச்சீட்டு நீள மானால், பல நடைமுறைச் சிக்கல் கள் ஏற்படும். ஒரு வாக்காளர் அதிக நேரம் வாக்குச்சாவடியில் செலவிட நேரிடும்".

"ஒரு வேட்பாளர் அதிகரித்தால், எமது செலவு குறைந்தபட்சம் 200 மில்லியன் அதிகரிக்கும். கருத்தியல் ரீதியாக பலர் வருகிறார்கள். அது எங் களுக்குப் பிரச்சினை இல்லை. அநேகமானோர் ஊடக வெளிச்சத்தை பெறுவதற்காக வருகின்றனர். ஆனால் அது இந்த நாட்டு மக்களின் பணம் என்பதனை எவரும் மறந்துவிடக் கூடாது என்றார். (ம-7)

## மக்...

ரணில் விக்கிரம சிங்க தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக் கிழமை இடம் பெற்ற "பெண்கள் எங்கள் பலம்" என்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதி பதி ரணில் விக்கி ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் ஆண்களுக்கு சமமாக, பெண் களின் உரிமை கள் வலுவூட்டப் பட்டு பாதுகாக் கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.(ம-7)

## தேர்...

அடிப்படையில் ஒழுக்கத்துடன் இருக்க வேண் டும்.

தேர்தல் சட் டத்தை மீறுவோ ருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதிக் கப்படும்.

எந்தவொரு வேட்பாளரும் தேர்தல் சட்டங் களை மீறினால், ஜனாதிபதித் தேர் தலின் பின்னரும் அவர்களின் பதவி களை நீதிமன்றத் தில் சவால் செய்ய முடியும் எனவும் குறிப்பிட் டுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.08.09 — சீட்டிழுப்பு இலக்கம் 5560 — S 2 9 5 7 9 4

அத சம்பத — S 5 7 9 4 — சீட்டிழுப்பு இலக்கம் 135 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.08.09 — சீட்டிழுப்பு இலக்கம் - 1590 — Q 13 36 41 58 Q — Double Chance 38122

மெகா பவர் — திகதி 09/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1908 — V 08 10 27 41 73 — 85993

லக்கி 7 VIP — திகதி 2024.08.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0386 — P 9 0 9 3 6 3 P

கோவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3802 — சீட்டிழுப்பு திகதி 09.08.2024 — H 69 71 74 80 — H 33323

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0869 — தனுசு 13 39 45 61 தனுசு — 35100 — 21

உத்தியோகபூர்வ முடிவுகள் — 09.08.2024 — வெற்றி வாரம் 268 — Z 3 9 7 9 5 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,288,464.00 — 30389 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2534 — வர்ணம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 09.08.2024 — தினம் வெள்ளி — 23 52 66 68 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,991,862.40

சனிதா — திகதி 2024.08.09 — வெற்றி வாரம் 4695 — 05 22 51 58 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,939,978.40 — 42024

சசிரி — வெற்றி வாரம் 513 — 2024.08.09 — பச்சை — 10 37 50 — 08 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,958,200/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4246 — வர்ணம் கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2024.08.09 — தினம் வெள்ளிக்கிழமை — 14 15 35 43 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,101,783.60 — 111261

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Z 03 20 24 59 71 — 1710 — இள கபில — 09.08.2024 — வெள்ளி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 538,061,749.80

வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2360 — 2024.08.09 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,410,624.80 — அட கோடிபதி ADA KOTIPATHI — 05 12 13 19 X — 267762


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**வங்கி மீதி வசதி (Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (230)

**074 17 37 684**

**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு: (216)

**075 033 6759**

**கோழி முட்டை மலிவு விலையில்**

1 Kg இறைச்சி 1000/=

முட்டை 35/=

நியூசிற்றி கோழிக்கடை கோழி பாம் குருநகர் மாக்கற் முன்பாக யாழ்ப்பாணம். (1658)

**அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்**

- Air Ticket Date Change
- Online Visa Appoinments
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services
- Travel Insurance
- Travel Itinerary

(C-0958)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

**Happy Supermarket - உரும்பிராய்**

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 235/= Max 5Kg | |
| 1 Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 199/= | |
| 1 Kg பொன்னி அரிசி | - 278/= | |
| 1Kg சம்பா | - 228/= | |
| 1Kg செத்தல் மிளகாய் | - 760/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 660/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 360/= | ~~500/=~~ |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3450/= | ~~3900/=~~ |

400g Anchor 1010/= ~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook: happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (236)

Happy Supermarket 0777 8080 30


# தேர்தல் ஆணைக்குழுவின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் தினத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பாதுகாப்புத் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கொழும்பு மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்றுள்ளது.

இதில் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளர் சமூக ஊடகங்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே தேர்தல் காலத்தில் சமூக ஊடகங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இன்ஸ்டாகிராம் மற்றும் டிக் டொக் போன்ற சமூக ஊடகங்களில் நாங்கள் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளோம் என்றும் அந்த நிறுவனங்களுடன் நாங்கள் நேரடித் தொடர்பில் இருக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


**கார் விற்பனைக்கு**

Audi Q2 (2018)ம் ஆண்டு கார் விற்பனைக்குள்ளது. (1668)

தொடர்புகளுக்கு:

**076 693 2227**

**கச்சான் பயிரிடுபவர்களுக்கு**

தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கச்சான் பயிருக்கான ஒரிஜினல் ஜிப்சம் (Gypsum) $CaSO_4.2H_2O$ இப்பொழுது எம்மிடம் மலிவான விலையில் அத்துடன் சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கச்சான் கோது உடைக்கும் இயந்திரமும் எம்மிடம்

ஆர்க் .என். கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021

A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571

A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917 (1670)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322

077 77 19 322

Visit Visas

Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0958)

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.

(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College 49A, Chapel Street,Jaffna. (C-0958)

College Of International Migration Skills

0777 068 777 / 077 7719 322


## மரண அறிவித்தல்



### திரு. சுப்பிரமணியம் யோகநாதன்

(ஓய்வுபெற்ற ஊழியர் - பிரதேச செயலகம், துணுக்காய், மல்லாவி)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வடகாடு மாங்குளத்தை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா, தோணிக்கல் எனும் இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் யோகநாதன் அவர்கள் 08.08.2024 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்ற பெரியதம்பி - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் பஞ்சாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்வராணி, புஸ்பராணி, திருநாவுக்கரசு மற்றும் லோகதாசன், சிவதாசன், தில்லைநாதன், கருணாகரன், கருணாதேவி, ஜெயந்திராணி ஆகியோரின் சகோதரரும் ஜெனனி, றஜனி, தங்கா, ஜீவாஞ்சலி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகனதாஸ், பகிரதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லித்துஜன், சேயோன், அனனியா, ஆரோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.08.2024) நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோணிக்கல்,
வவுனியா.

(மகள்) 077 083 3846
074 115 1915 (Whatsapp)

(1669) தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி பார்வதி அமிர்தலிங்கம்



தோற்றம்:29.10.1937 மறைவு:05.08.2024

யாழ். மத்தொனி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், ஆலடி, கரணவாய் மற்றும் கனடா Calgary யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி அமிர்தலிங்கம் அவர்கள் 05.08.2024 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - இலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தவமலர், வானதி, தேவகி, சுமதி, சுகந்தி, காலஞ்சென்றவர்களான தவலிங்கம், ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்ரனி, தர்மகுமார், சுதாகரன், அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிந்தி, அபிலா, கீர்த்திகன், வித்தி, ஷியாம், சங்கவி, பவித்ரா, ஷாமிலி, நிது, அரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் கந்தசாமி, காலஞ்சென்றவர்களான அம்மா, யோகம், தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 10.08.2024 சனிக்கிழமை இன்று அந்திரான், நெல்லியடியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியை 11.08.2024, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை அந்திரான், நெல்லியடியில் நடைபெற்று சோனப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(1653) தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.